# பூநகரி பிரதேச சபை

கிளிநொச்சி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 யூலை 07 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 டிசம்பர் 15 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பூநகரி பிரதேச சபையின் 2013 நிதியாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | செலவினம் | | வருமானம் | | சொத்துக்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 415இ000 | 02 | 44இ103 | 01 | 5இ590இ000 |

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 170இ021 பெறுமதியுடைய 18 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 2இ801இ862 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 1இ433இ801 விளைந்திருந்தது.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 5இ602இ113 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 2இ904இ341 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | - | 193 | |
| குத்தகை வாடகைகள் | 2இ143 | 2இ005 | |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 602 | 455 | |
| வேறு வருமானங்கள் | 15இ985 | 21இ679 | 3இ305 |
| | 18இ730 | 24இ332 | 3இ305 |

**2.3.2 வருமான பாதிப்பு**

சபையின் எல்லைக்குட்பட்ட ஆதனங்கள் தொடர்பாக ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடப்படாமையால் சபையின் வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

**2.3.3 முத்திரைத் தீர்வைக் கட்டணம்**

(i) 2013 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்படவேண்டிய முத்திரைத்தீர்வைக் கட்டணம் ரூபா 915,670 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 - 2012 வரையான காலப்பகுதிக்கான முத்திரைத் தீர்வைக் கட்டணம் ரூபா.1,168,864 கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 அறவிடப்படாத வருமானங்கள்

------------------------------------

அரசிறைக்கடனாளிகள் கணக்கில் ரூபா 333இ264 பெறுமதியான அரசிறைக்கடனாளிகள் குறித்த காலப்பகுதியில் மீளப்பெறப்படாது தொடர்ந்தும் அறிக்கையிடும் திகதிவரை அரசிறைக்கடனாளிகள் கணக்கில மீதியாகக் காணப்படுகின்றது.

### 2.3.5 தொலைத்தொடர்பு கோபுரத்துக்கான கட்டணங்கள்

------------------------------------------------------------

17.04.2009 திகதியிடப்பட்ட 1597∴8 இலக்க விசேட வர்த்தகமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்ட 01 தொலைத்தொடர்பு கோபுரத்திற்கு கட்டணங்களான பின்வருவனவற்றை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் வருமாறு.

1. அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கல்
2. பூர்வாங்கத்திட்டமிடல் அனுமதி
3. இசைவுச்சான்றிதழின் வழங்குகைகள்
4. மேவுதல் அங்கீகாரம்

### 2.4 இணக்கமின்மைகள்

-----------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| <u>சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு</u> | <u>விபரம்</u> |
|---|---|
| <u>(அ)1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக ஒழுங்கு விதி</u><br>அத்தியாயம் ஏ<br>பிரிவு 140 | தவிசாளருக்கு உரிய காரணமின்றி வழங்கப்பட்ட முற்பணம் ரூபா. 25,000 அறிக்கையிடும் திகதி வரை மீளப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள்<br>(ை) விதி 189 | ரூபா 66,670 பெறுமதியான காசோலையை சபை பாதுகாப்பு வைப்பாக 13.06.2012 இல் சபை பெற்றுள்ளது. இக்காசோலைக்குரிய பணம் வங்கியினால் மறுக்கப்பட்டது தொடர்பில் சபை நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (ை) விதி 571 | 02 வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்த வைப்புக்கள் ரூபா.1இ257இ649 தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ)பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 10 ஒக்டோபர் 1990 ஆம் திகதிய 41.˙.90 இலக்க சுற்றுநிருபம். | சபையின் வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ஈ)28.11.2002 திகதியிடப்பட்ட ஐயுஜ.˙.2002.˙.02 இலக்க திறைசேரி சுற்றுநிருபம். | சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கு பதிவேடுகள் பேணப்படவில்லை. |

| | |
|---|---|
| (உ)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் கணக்காய்வு முகாமைத்துச் சுற்றுநிருப இல னுஆயு.்.2009 (1) ஆம் திகதி 09.06.2009 | மீளாய்வாண்டிற்கு குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்க வேண்டுமெனக் குறிப்பிட்டபோதும் அவ்வாறான கூட்டமேதேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

----------------------------------------

### 2.5.1 உரிமைமாற்றம் செய்யப்படாத வாகனங்கள்

-----------------------------------------------------

சபையின் பயன்பாட்டுக்கென அன்பளிப்புச் செய்யப்பட்ட 14 மோட்டார் வாகனங்கள் உரிமை மாற்றம் செய்வதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

## 2.6 முகாமைத்துவப் பலவீனம்

------------------------------

சபைக்குரிய 31 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்காமையினால் சபையினது அபிவிருத்தித் திட்டங்கள் பாதிப்படைந்து காணப்படுகின்றது. சபையால் ஆளணி வெற்றிடங்கள் நிரப்புவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 நடைமுறைப்படுத்தப்படாத திட்டம்

-----------------------------------------------

பிரதேச சபைக்குட்பட்ட சனசமூகநிலையங்களிற்கான நன்கொடைகள் மற்றும் தொழிற்பாட்டு விருத்திக்கான நன்கொடை ரூபா 361,186 உரிய சனசமூகநிலையங்களுக்குக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.8 அங்கீகரிக்கப்படாத செலவீனம்

நடைமுறையாண்டில் சபையினால் போசாக்கு குறைந்த பிள்ளைகளுக்கு பால்மா கொள்வனவு, அனர்த்த முகாமைத்துவ சேவையின் பொருட்டு ஏற்பாடு செய்தல் போன்ற செலவுகளுக்காக ரூபா. 415,000 நிதியினை நடைமுறையாண்டு செலவீனமா காட்டப்பட்டு கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது தொடர்பாக பிரதேச சபை சட்டம் பிரிவு 132 (ஊ) இன் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

பிரதேச சபையினுள் உள்ளகக் கணக்காய்வு இன்மையால் உள்ளகக் கட்டுப்பாடுகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.10 திண்ம கழிவு முகாமைத்துவம்.

சபையின் எல்லையிலிருந்து பெறப்படும் குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகள சபையால் மேற்கொள்வதேயன்றி கொம்பொஸ்ட் செயற்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. வருமான சேகரிப்பு
ii. நிலையான சொத்துக்கள்
iii. கணக்கீடு
iv. ஆளணி
v. நன்கொடை
vi. நானாவித வைப்புக்கள்
vii. வரவு செலவுத்திட்டம்
viii. களஞ்சியப் பொருட்கள்